மாண்புமிகு பேரவை தலைவர்: இதற்கு வருவாய் துறைத் அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்க இருக்கிறார்கள்.

திரு. மு. அம்பிகாபதி: மத்திய அரசாங்கத்திற்கு ஒருங்கிணைந்த சட்டம் தேவையில்லை என்று எழுதியதால்தான் விவசாயத் தொழிலாளர்கள் மத்தியில் ஒரு பதட்டமான, கொந்தளிப்பான, பரபரப்பான, கடுமையான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இதன்மீது உடனடியாகத் தங்கள் கருத்தை இந்த அவையிலே தெரிவிக்க முன்வர வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத் தொழிலாளர்களுக்கு 1979 செப்டம்பர் மாதம் 15 ஆம் தேதி கூலி நிர்ணயிக்கப்பட்டது. அந்தக் கூலியை மாற்றியமைக்க வேண்டுமென்று குழு அமைத்திருக்கிறோம். இந்தச் சமயத்தில் நீங்கள் கிளர்ச்சி செய்தால், நம்மால் அந்தக் கூலி உயர்வு வந்தது என்ற ஒரு அரசியல் தந்திரத்தோடு மாண்புமிகு அம்பிகாபதி அவர்கள் சொல்வது—அது அரசியல் தந்திரம் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். விவசாயத் தொழிலாளர்களுக்காக ஒரு காம்பிரெஹென்சிவ் லெஜிஸ்லேஷன் கொண்டுவர வேண்டுமென்று மத்திய அரசு முடிவெடுத்து, அதை மாநில அரசுக்கு அனுப்பியிருந்தார்கள். 2,3 நாட்கள் அதிகாரிகளுடன் உட்கார்ந்து என்னென்ன வகையில் மாற்றியமைக்க வேண்டும், எவை எவைகளைப் புதியதாகச் சேர்க்க வேண்டும் என்ற பரிந்துரையை மத்திய அரசுக்கு இந்த அரசு அனுப்பியிருக்கிறது.

(இ) வறட்சி, குடிநீர்ப் பிரச்சினை.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டு குடி தண்ணீர் இல்லாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அதைப்பற்றி ஒரு மணி நேரம் விவாதத்தை எப்போது வைத்துக்கொள்ளப் போகிறீர்கள்?

திரு. செ. சிவசாமி: வறட்சியைப் பற்றி விவாதிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வறட்சியைப் பற்றியும் காவேரி நீர் பிரச்சனை பற்றியும், உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்ல ஒரு மணி நேர விவாதம் என்ற முறையில் வைத்துக்கொள்ளலாமா அல்லது ஒத்திவைப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்ளலாமா என்பதைப் பற்றி அலுவல் ஆய்வுக் குழுவில் கலந்துகொண்டு முடிவு எடுக்கலாம்.

1982 செப்டம்பர் 7]

திரு. கு. ரமணி: வறட்சி பற்றி ஒரு மணி நேர விவாதம் என்று சொல்கிறார்கள். ஒரு மணி நேர விவாதம் போதாது. ஒரு நாள் விவாதம் வைத்துக்கொள்ள வேண்டும். இன்றைக்கு வறட்சியின் காரணமாக மக்கள் குடிநீர் இல்லாமல், விவசாயத்திற்கு நீர் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அன்றைக்குப் பேசும் போது ஒரு மணி நேர விவாதம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு மணி நேர விவாதம் போதாது. ஒரு நாள் விவாதம் வைத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். ஏ. பூங்காவனம்: வறட்சியைப் பற்றி இப்போது எடுத்துக்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப்பற்றி உங்களுக்கு நோட்டீஸ் வரும். அப்போது தெரிந்துகொள்ளுங்கள்.

திரு. ந. சிவஞானம்: மேட்டூர் அணைக்குத் தண்ணீர் வரவு குறைவாக இருக்கிறது. அதனால் தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதைப் பற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கனவே நான் சொன்னேன். காவேரி பிரச்சனை வறட்சியில் வருகிறது. அதனால், எல்லாம் ஒரே பிரச்சனைதான். அப்போது இதையும் சேர்த்து பேசிக் கொள்ளலாம்.

(ஈ) எஸ். ஐ. ஈ. டி. கல்லூரிப் பிரச்சனை.

திரு. அ. ரகுமான்கான்: எஸ். ஐ. ஈ. டி. பிரச்சனைப் பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானத்தை இப்போது எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கல்வி சம்பந்தப்பட்ட மசோதா வருகிறது. அதைப்பற்றி அதிலே பேசிக்கொள்ளலாம்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டுவருகிற மசோதா பொதுவான பிரச்சனைப் பற்றியது. ஆனால் நான் கொடுத்து இருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானம் எஸ்.ஐ ஈ.டி. கல்லூரியைப் பற்றியது. கல்வி மசோதாவிலே இந்தக் குறிப்பிட்ட சம்பவத்தைப் பற்றி பேசி விடமுடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கல்வி மசோதாவிலே யாரும் இதைப்பற்றி பேசாவிட்டால் அப்போது இதைப்பற்றி கவனிக்கலாம்.

திரு. அ. ரகுமான்கான்: இதற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. இது தனிப்பட்ட கல்லூரி பற்றிய பிரச்சனை. அதனால் தான் விதி 55-ஐப் பயன்படுத்தி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறோம்.